உ

வேலுமயிலுந்துணை.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்
# சரித்திர சங்கிரகம்.

தி. மு. இராஜம் முதலியாராலும்,

சை. சி. நடேச முதலியாராலும்,

எழுதப்பட்டு

சென்னை திருவல்லிக்கேணி

ஸ்ரீ நடராஜ பக்தஜன சபையாரால்

வெளியிடப்பட்டது.

1920.

இதன் விலை, அணா-2.

# புத்தக விளம்பரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. இந்நூலாசிரிய ஸ்ரீ. அருணகிரிநாத சுவாமிகள் சரித்திர சங்கிரகம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 2. ஷை. சுவாமிகள் அருளிச்செய்த கந்தரநுபூதி சரித்திரக் குறிப்புடன் ... ... ... | 0 | 0 | 6 |
| 3. கந்தரநுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி ஆகிய இம்மூன்றும் ஒரே புத்தகம் ... ... | 0 | 2 | 0 |
| 4. தமிழ்ப்புலவர் சரித்திரம், முதற்பாகம் இதில் ஒட்டக்கூத்தர், படிக்காசர், இரட்டையர்கள் முதலிய தெய்வப்புலவர்களின் சரிதங்கள் அடங்கியுள்ளன, இவை கோவை. ஸி. கு. நாராயணசாமி முதலியாரால் எளியநடையில் எழுதப்பட்டவை. ... | 0 | 8 | 0 |
| 5. தமிழ் நாவலர் சரிதை (ஷையார் பதிப்பு) ... | 0 | 4 | 0 |
| 6. பொய்யாமொழிப்புலவர் சரிதம் (ஷையார் பதிப்பு) | 0 | 2 | 0 |
| 7. பரத்தையர் கேண்மை விலக்கு (இது மிகவும் உபயோகமான தொருநூல் (ஷையார் பதிப்பு) ... | 0 | 4 | 0 |
| 8. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் மூலமும் உரையும் இரண்டும் ஒரே புத்தகம் இது சைவசித்தாந்தம் படிப்பவர்களுக்கு மிகவும் உபயோகமானது (காஞ்சி நாகலிங்க முதலியார் பதிப்பு) ... | 1 | 0 | 0 |

மேற்சொல்லிய புத்தகங்களைத்தவிர தேவாரம், திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவையார் முதலிய பன்னிரு திருமுறை நூற்களும் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், தலபுராணங்கள் முதலிய இன்னும் பல சைவசமய நூற்களும் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் சுத்தப்பதிப்பாய் வாங்கியனுப்பப்படும். மற்ற விவரங்களுக்கு கடிதம் எழுதித்தெரிந்து கொள்ளவும்.

சை. தி. நடேச முதலியார்,
நெம்பர் 40, தோப்பேட்டைத் தெரு,
சைதாப்பேட்டை சென்னை.

வேலுமயிலுந்துணை.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் சரித்திர சங்கிரகம்.

இது
தி. மு. இராஜு முதலியாராலும்,
சை. தி. நடேச முதலியாராலும்,
எழுதப்பட்டு

சென்னை திருவல்லிக்கேணி
ஸ்ரீ நடராஜ பக்தஜன சபையாரால்

சென்னை
கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1920 விலை, அணா-2

# முன்னுரை.

தமிழ் வீட்டு நூலெனப்படுந் தெய்வத் திருப்புகழ் இக்காலத்தி லெங்கும் யாவராலும் பொன்னே போற் போற்றப் படுவதும், அறுமுகச் சிவனார் அருட்பாட்டினையும், அப்பெருமானை வழிபடு மாற்றினையும் நம்மனோர் அறிந்துய்வான், தமது சொல்லாலும் செயலாலும் நன்குவிளக்கிக் காட்டியருளிய மெய்ஞ் ஞானியாகிய ஆசிரியர் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளது சரிதங்கள் மாத்திரம் பலராலவிகாரமுறப் பொய்க்கதைகள் பல படப்புனையப் பட்டு வழங்கப்படுகின்றன. அவை அப்பெரியாரது அருட் டகைமைக்கும் ஆற்றலுக்கும் பெரிதும் முரண் படுகின்றன; மேலும் அவை தங்குலத்தி லபிமானமும் பிறகுலத்தில் வைடம்மியமு முள்ள சில்லோராலேயே அங்கீகரிக்கப் படுகின்றன.

ஆகவே, அப்பொய்க் கூற்றுக்களை யொழித்து, அவரது உண்மைச் சரித்திரம் நந்தமிழுலகம் உவக்க உலவ வேண்டுமென்னுங் கருத்தானே இனிது எழுதிமுடித்திருக்கின்றோம். இதனை அறிஞர் யாவரும் ஏற்பார்களென்றே நம்புகின்றோம்.

இச்சரித்திரம் எழுதி வரும்போது உடனிருந்து பல விதத் தாலும் உதவிசெய்த எமது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ மா. அ. கனகசபை முதலியார் அவர்களுக்கும் எமதன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப் பட்டுளோம்.

இப்படிக்கு,

தி. மு. இராஜு முதலியார்.

சை. தி. நடேச முதலியார்.

# பொருளடக்கம்.

**சரித்திர சங்கிரகம் :—**

1. பிறப்பிடம்.
2. ஜனனப் பிரபாவம்.
3. கல்வி பயின்றமை.
4. தடுத்தாட்கொண்ட விபவம்.
5. தலயாத்திரை விசேடம்.
6. வில்லிபுத்தூராருடன் கல்விப்போர்ச் செய்தமை.
7. சம்பந்தாண்டானுடன் வாதம் நிகழ்த்தியதும், கற்பகமலரின் பொருட்டுக் கிளியுருவ மடைந்ததும்.
8. சிதாகாசப் பெருவெளியில் மறைந்தருளல்.

**கவனக்குறிப் பட்டவணை :—**

1. காலவரை.
2. மரபு விளக்கம்.
3. தடுத்தாட்கொண்ட விஷயக்குறிப்பு.
4. கிளியுருவம்பெற்ற விஷயக்குறிப்பு.

உ

வேலுமயிலுந் துணை.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் சரித்திர சங்கிரகம்.

## அருணகிரிநாதர் துதி.

### ஆசிரிய விருத்தம்.

கார்முகில் வண்ணனுங் கமலமலர் வாசனுங் காணவரிதாகி நின்று, கல்லாலமர்ந்தவன் கருணைபெறு மாதர்பாற் கந்தவேட்டுணைவராகச்,- சூர்தனை யொழிக்கவே தோன்றிமுக மாமுகன்றாண்டாப் படைத்துணைவராய்ச், சோணாடுமேவிதரு வாரூருமொண்டகை சோர்விலாக் குந்தர்மரபிற்,- சீர்பரவு திலகமாய்த் திருவருணையம்பதியில் சிவனருளினாலுதித்துத், தென்கடல்கடந்து முருகக்கடல் படிந்துலகு செந்நெனற்பயிர் தழைக்க,-வார்குவடு தொறுநின்றுவான் திருப்புகழ்மாரி வருடித்தவருணகிரிமா, வள்ளன் மேகத்தினது வண்டிருப்புகழ்ப்பாடி வனசமா மலர்சூடுவாம்.

## பிறப்பிடம்.

செந்தமிழ் மணக்கும் நந்தம் திருநாடாம் சோழநாட்டின் வடமேற் புறத்ததாய நடு நாட்டில்,

"துவக்கற வறிந்து பிறக்குமா ரூரும் துயர்ந்திடாதடைந்து
காண்மன்றும், உவப்புடன் நினைத்து மரிக்குமோர் பதியும் ஒக்குமோ நினைக்குநின்னகரை." (சோணசைலமாலை)

என்று நினைக்க முத்தியளிக்கும் நிர்மலப்பதி யெனப் போற்றப் பெற்றதும், அரியுமயனுந் தாந்தாம் பரமென்றுமாந்து முறையே ஏனத்தின் வடிவுகொண்டு அடிதேடி வருவலென அவனியெலா மிடந்தும், எகினத்தின்

வடிவுகொண்டு முடிதேடி வருவலென மூதண்ட மிசை பறந்தும் காணரிய வொரு பொருளாஞ் சோதிசைலத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளதும், தேவர், முனிவர், சித்தர், யாவராலும் துதிக்கப்படுஞ் சிவலிங்க மூலகாரண நிலயமாக வுள்ளதெனச் சைவ மகாபுராணத்தா னெடுத்துரைக்கப் படுவதும், வல்லாள வேந்தனுக்குச் சிவபெருமான் புத்திரரா யவதரித்து அநுக்கிர கித்ததும், பிருதிவி முதலிய பஞ்ச பூதத்தலங்களுள் தேயுத்தலமாய் விளங்குவதும், பார்வதிதேவியார் தவம்புரிந்து இடப்பாகம் பெற்றதும், வச்சிராங்கத பாண்டியன், கலாதரன், காந்திசாலி முதலியோர் வலம்வந்து முத்தி பெற்றது முதலான பல அற்புதச் சரித்திரங்கள் நிகழப் பெற்றதும், வாயு நகரம், கௌரிநகரம், ஞானநகரம், சிவலோகபுரி, முத்திபுரி, தழலேச்சுரம், தக்கிண கைலாயம் முதலான சிறப்பு நாமங்களையுடையதும், பெண்ணையாறு, சேயாறு, கமலை நதியாதிய தீர்த்தங்களை யுடையதுமான தெய்வப்பதியெனக் கூறப்படுவது திருவண்ணாமலை.

## ஜனனப்பிரபாவம்.

அப்பதியிலே, சற்றேறக் குறைய 440. வருடங்களுக்கு முன், குந்தாயுதனே குணபரஞ் சுடரென்றெந்நாளும் வந்தனை புரிந்து வதியும் பெருமை மிக்க செங்குந்த மரபில், நல்லொழுக்கமும் நற்குணமு முடைய மாசிலாதோர் சற்குடும்பத்தில், * காதன் மனையாளுங் காதலனு மாறின்றிப் பிள்ளையெனும் பேற்றிற்கே பேரவா வுடையோராய் நமது அம்மை யப்பராகிய அருணசலேசுவரரையும், உண்ணாமுலையம்மையாரையும், கருணையங் கடலாகிய

* தந்தையார், தாயார்களது பெயர்முறையே மூதண்டநாத முதலியா ரென்றும், முத்தம்மையா ரென்றும் கன்னபரம்பரை யானே கூறுப. தக்கவாதார மின்மையால் விடுத்தாம்.

முருகப் பெருமானையும் நாடோறும் வழிபட்டு வருவா ராயினர். அங்ஙனம் வழிபட்டு வருகையில் ஓர்நாள் தம் வழிபாட்டின் ஆற்றலாலோ, தங்குலத் தூய்மையாலோ, தம்பதி (அருணைப்பதி) யதிர்ஷ்டத்தாலோ,

" தாயினு மினியவரு ளறுமுகனுந் தடம்புயவீரரை நோக்கிப், போயவற்கினிய கேளிராப்பொருந்திப் புவியிடை நங்குலம் விளக்கி, யாயினபின்னர் நம்பதபெறுமென் றருள்விடைதலைகொடுச்செல்லச், சேயினிற்குந்தன் வந்தெதிர்கொண்டு திகழுறத்தழீஇப் படர்ந்த னனுல்."

(கந்த புராண சங்கிரகம்)

எனவரும் சூரப்ப நாவலர் சுந்தரமொழியின்படி முன்னு ளில் முருகவேள் தந்தம்பியர்களை விளித்து நீவிர் புவியி டை வைகும் முசுகுந்தன் பாற் சென்று நங்குலங் கண்டு வருக வென்றருளியதுபோல், இப்போது தஞ்சமயத் தையும் விளக்க வெண்ணி யப்பெருமானது திருவருளும் ஒருங்கு கூடவே, அதனால் ஆழ்ந்த கருத்தும், அரியபொ ருளும், கற்பனாலங் காரங்களும் சிறந்து விற்பனமலியச் சொல்லலங் காரத்துடன், பலசந்தங்களாலாய வருமறை யின் சிரப்பொருளா யமைந்த தெய்வத் திருப்புகழைப்பா டித்தரவும், அதனைத் திருக்கை வேலன் திருவடிகளுக்குத் தொண்டு பூண்டொழுகும் மெய்த் தொண்டர்களெல்லாம் நித்தமும் புகழ்ந்து போற்ற வேண்டி, அருணேச னருளால் நம்மருமைத் தாயார் கருப்பமெய்தினர். பின்னர் அவ்வம் மையார்க் கருவளர்தற்குரிய உயிர்வளர் மாத மொன்பதுங் கடந்து பத்தா மாதத்தில் நல்ல வோர் சுபதினத்தில் ஓரா ண்மகவை யீன்றருளினர்.

இவ்வா றீன்றெடுத்த அந்தத் தெய்வதக் குழந்தை க்கு அவரின் பெற்றோர் " அருணகிரி " என்று திருநாம மிட்டு நாளொரு மேனியும் போதொரு வண்ணமுமாக வளர்த்து, மங்கலவணி சாற்றி, திங்கள் தோறும் காப்புப்

பரவி, பருவந்தோறும் விழாவணி யெடுப்பப் பிள்ளையுந் தளர் நடைப் பருவஞ் சேர்ந்தார்.

## கல்வி பயின்றமை.

தளர் நடையுற்ற தெய்வதக் குழந்தையாகிய நமது ஆசிரியர் அருணகிரிநாத சுவாமிகள், தமது குழந்தைப் பருவத்திற்குரிய காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை கொட்டல், சிற்றில் சிதைத்தல், சிறுதேருருட்டல் முதலிய பிள்ளைப் பருவங் களையுங்கடந்து ஐந்து வயதெய்தவும் பள்ளிக்கனுப்பப் பட்டார். அப்பருவ முதற்கொண்டே கல்வியிலும் கடவுட் பக்தியிலும் தமது நாட்டத்தைச் செலுத்துவாராயி ஞர். அத்தருணத்தி லோர்நாள் கருணை மூர்த்தியாகிய குமரவேள், அருணகிரி யாரது பெற்றோரின் கனவிற் ரோன்றி "நமது குழந்தையைச் சிறுபிள்ளை யென்றெண்ணற்க, விண்ணுலகு மண்ணுலகு மொருங்கே மதிக்கக் கூடியவன். எந்தஞ் சமயத்தையும் எம்பியர் குலத்தையும் விளக்கவே நும்பா லிம்மகவைத் தந்தோம்" எனக் கூறி மறைந்தருளினர். அது கேட்ட அவரின் பெற்றோர், கந்தன் கனவிற்றோன்றி யுரைத்த கட்டுரையை யுபதேசமொழியாக் கொண்டு அன்று முதல் தம்மகனைக்கண்டு பூரிப் படைந்து வந்தனர்.

## தடுத்தாட்கொண்ட விபவம்.

இங்ஙனம், அருணகிரியார் கல்விபயின்று வருநாளில் இவரது கல்வியறிவு வரம்பெய்தி நின்றது. கடவுட் பக்தியும் நிறம்பப் பெற்று,

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்."

" வேண்டுதல் வேண்டாமை யிலாதானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில." (திருக்குறள்)

எனவரும் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்கூறிய வேத மொழிகளின்படி நமது ஆசிரியர் அருணகிரிநாத சுவாமிகள் ஆண்டவனை வழிபடுவதே பிறவிப் பெருங்கடனீந்து தற்குரிய வுபாய மென்றெண்ணி, நாடோறும் சர்வ ஜெகத்துக்கும் கர்த்தராகிய அண்ணாமலை நாதரையும், ஜெகன் மாதாவாகிய உண்ணாமுலை யம்மை யாரையும், கருணையங் கடலாகிய குமரவேளையும் வழிபட்டுவருவாராயினர். அக்காலத்தில் நமது சுவாமிகளும் தமக்குரிய பிள்ளைப் பருவங் கடந்து காளைப் பருவத்திற் குரிய பதினாறும் வயதுற்றனர். அப்போது அவரைக் காணும் பெண்களுள் சிலர்,

" மதனசொரூப னிவனென மோக மங்கையர் கண்டு
மருண்டு திரண்டு வரிவிழி கொண்டு சுழியவெறிந்து "

என்னும் பட்டினத் தடிகளது அருள்வாக்கிற் கிணங்க அவரது எழிலுருவத்தில் மையல் கொண்டனர்.

" மாதிரு விழியாகு மம்புக்கு மதனவேள் வாளிக்கு
நடுவாகியே மாலாகு மருணகிரிநாதர் "

எனவரும் மார்க்கசகாய தேவர் மலர் வாக்கின்படி அவரையுந் தங்கருத்திற்கிசைய மயக்குவதாயினர். ஆண்டவன் அருள் வழியொழுகும் ஆசிரியர் அருணகிரியார் அவர்கள் கருத்திற்குச் சிறிதும் இணங்க வில்லை. ஆயினும் மின்னார்கள் மையல், மீண்டு மீண்டுமிவரை மயக்குவதாயிற்று. சுவாமிகளும் இனிநா மின்னு மிங்கிருப்பின் உலகவின்பம் நம்மைப் பற்றிக் கொள்ளுமோ வென்றஞ்சி,

" வளைபட்டகை மாதொடு மக்க ளெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ " (கந்தரனுபூதி)

என்று தங்குல தெய்வமும் தாம் வழிபடு கடவுளு மாகிய முருகனை நினைந்து நினைந்து உருகுவதாயினர். அதுபோ

ழ்த ஆசிரியருக்கு இருவினை யொத்து மும்மை மலம்நீங்கி வருங்கால மாயிருந்தது. ஆகவே, ஆண்டவன் ஆசிரியர் அருணகிரியாரை யாட்கொளத் திருவுளங் கொண்டு திருவருளை யவர்பாற் செலுத்தி யருளினர். ஆண்டவன் திருவருள் தீண்டப்பெறுதலும் ஆசிரியர் ஞானமுதிரப்பெற்று ஆவைப்பிரிந்த கன்றேபோல் ஓடோடியும்போந்து,

“ அடவருணைத் திருக் கோபுரத்தே யந்த வாயிலுக்கு
வடவருகிற் சென்று கண்டு கொண்டேன்
* * களிற்றுக் கிளைய களிற்றினையே ” (கந்தரலங்காரம்)

எனவரும் செய்யுளின்படி அருணைச் சிவாலயச் சிகரியின் வடபால் நிலவும் அறுமுகனார் ஆலயத் துட்புக்கு ஆண்டவனைக் கண்டார்; தாயைக் கண்ட சேயைப் போல ஆனந்தபரவச மானார். அடியற்ற மரம்போல் கீழே விழுந்தார். உள்ளம் நைந்து நைந்து உருகுவதானார். பின்னும் அவணின்றும் நீங்கற்கு மனமின்றி ஆண்டே தனித்த தோரிருக்கையில் அவருள்ளம் பள்ளத்துத் தங்கிய வெள்ளம் போல் (ஓடாது) ஆண்டவனையே சிந்தித் திருக்கு மொருதியானத்திலிருந்தது. அங்ஙனம் ஆறுநாளிருந்த தற்பின் ஆண்டவன் அவருக்குத் தரிசனந் தந்தருளத் திருவுளங் கொண்டவராய் அவர்முன் தோன்றி அன்பனே! நீ நம்மைப் பாடுக வென்றலும், நாயினுங் கடைப்பட்ட யான் தேவரீரது புகழை என்சொல்லிப் பாடுகேனே வென்றிறைஞ்சிநின்றார்,

“* * * * அருணகிரிநாத நருணைச் சிகரி வடவாசலிற் பயிலகம், பாதமலர் பாடுநீயென்ன வடியேனு மெப்படி பாடவென்றளவிற் பத்திதரு முத்தநகை யத்தியிறைவா வெனப்பாடென்று சொல்லியவாற், பூதலமுமெங்கிளையுமீடேற நாவிற் பொறித்தவருரைத்தக்கவிதைப், புத்தமுது பன்னிரு செவிக்குநிறையக்கொண்டு போதமு மளித்தருளினர்.”

(திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்.)

எனவரும் மார்க்க சகாய தேவர் மலர் வாக்கின்படி ஆண்டவனும் பூதலமு மெய்க்கிளையு மீடேற, "முத்தைத்தரு பத்தித்திருநகை யத்திக்கிறை, சத்திச்சரவண முத்திக்கொரு, வித்துக்குருபர வெனவோதும்" என்றடி யெடுத்துக் கொடுத்து அவர் நாவில் ஞானசத்தியென்னுந் தமது வேல்கொடுபதித்துத் தம்மைப்பாடும் ஆற்றலையு மனுக்கிரகித்தார். உடனே ஆசிரியர் அருணகிரியார்,

"முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர எனவோதும்
* * * * * * *
* * * * * * *
கொட்புற் றெழ நட் புற்றவுணரை
வெட்டிப் பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே",

என்னுந் திருப்புகழைப்பாடினர். அது முதற்கொண்டு முதிருஞ்சுவை கொண்டு மதுரயகனிந்து செங்கைவேலவன் சீர் சிறந்த அந்தமிகு சந்தம் பொலியும் தெய்வத் திருப்புகழைப் பாவலரு நாவலரு மெச்சுமாறு பாடி அவற்றை முருகன் திருவடிகளில் தினமுஞ் சூட்டிவந்தனர். ஆறுமுகனும் அவைகளை யன்புடனேற்று ஆசிரியரை ஆனந்த பரவசராக்கி யருளினர்.

## தலயாத்திரை விசேடம்.

பின்பு, ஆசிரியர் அருணகிரியார் எள்ளற்குரிய இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து தம்மை யாட்கொண்ட முருகப் பெருமானுடைய சந்நிதியையே தமக்குரிய வாசஸ்தானமாகக்கொண்டு அவனுடைய திருப்புகழ்களை எடுத்துப் பாடுவதே தமக்குரிய மெய்த்தொண்டென வெண்ணி, அங்கிலேயினிற்குமவர், முழுமுதற்கடவுளாகிய முருகவேள்

திருக்கோயில் கொண்டுள்ள சோழநாடு, பாண்டிநாடு, ஈழநாடு, தொண்டைநாடு, நடுநாடு, கொங்குநாடு, மலையமாநாடு, வடநாடுகளிலும், அவற்றை யுள்ளிட்ட கிளைநாடுகளிலு முள்ள பலதலங்களையும் தரிசித்துய்ய வேண்டி, அண்ணாமலையினின்றும் புறப்பட்டுச் சோழநாட்டி லுள்ள பெரும் பற்றப் புலியூரென்னும் சிதம்பரத்தை யடைந்து,

"விடுங்கைக் கொத்தக டாவுடை யாணிடை
* * * * *
பெரும்பற்றப்புலி யூர்தனின் மேவிய பெருமாளே"
(பெரும்பற்றப்புலியூர்)

என்னுந் திருப்புகழைப்பாடி சுவாமி தரிசனஞ்செய்து திருப்பிரமபுர மெனும் சீகாழிப்பதியை யடைந்து,

"தருவினை யிழந்துய ருண்டு வெருண் டுறு
* * * * *
பிரம புரந்தனி லுங்குக மன்னவ் பவர்
மனமதி லும்பரி வொன்றி யமர்ந்தருள் பெருமாளே"
(திருப்பிரமபுரம்).

என்னும் திருப்புகழ்ப்பாடி சுவாமிதரிசனஞ் செய்து திருவேரகம் எனும் சுவாமி மலையை யடைந்து,

"குமர குரு பரமுருக குகனே குறச்சிறுமி
* * * * *
சிவ சமய வறுமுகவ திருவேரகத்திலுறை பெருமாளே"
(சுவாமிமலை)

என்கிற திருப்புகழும் இன்னும் பல திருப்புகழ் பாக்களும் பாடி, அங்கு சில நாட்கள் தங்கி, சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு இப்பதியை எளிதில் நீங்கி, திரிசிரமலை, திருவாரூர், திருவானைக்காவல் முதலிய ஏனைய சோழநாட்டுத் தலங்கட்குஞ் சென்று சுவாமி தரிசனஞ் செய்து, கொங்கு நாட்டை யடைய விரும்பி திருப்பழநி என்னும்

தலத்தை வந்தடைந்தனர். அத்தலத்துமீதுள்ள அவா மேலீட்டினால்,

"குவளை பொருதிரு குழையை மூடிகிய
*         *         *         *         *
பரியு மிடறிய பழநிமலை வரு
பாவ லோர் புகழ்              பெருமாளே".

(திருப்புகழ்).

என்னும் பிரபந்தத்தைப்பாடி இங்கு வெகுநாட்கள் தங்கி சித்த கோலத்துடன் விளங்கும் பழநியப்பரைத் தினந் தோறும் தரிசனஞ்செய்து, அப்பெருமானது திருவடிக ளுக்குப் பாமாலைகளும் தினமுஞ் சூட்டிவந்தனர். இத்த லத்தின்மீது மிகப்பற்றுடையவரும், பற்பல திருப்பணி களை இயற்றிவருபவருமான கவிசைச் சேவகனோடு நட்பு கொண்டு மிகப் பிரபலமாய் விளங்குகின்ற காலத்தில், பழநியப்பர் நமது ஆசிரியர் அருணகிரியாரை விராலிமலை க்குச் செல்லும்படி ஆக்கியாபித்தனர். அக்கட்டளையின் படியே கவிசைச் சேவகனை விட்டுப்பிரிய மனமில்லாதவ ராய், மீண்டும் அங்குவருவதாகச் சொல்லி அதிசீக்கிரத் தில் விராலிமலையை யடைந்து,

"தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணை நினைப்பி          லடியேனை
தாதவிழ் கடுக்கை நாகமகிழ் சற்ப
தாருவென மெத்திய விராலி
மாமலையி னிற்பம் நீ கருதியுற்று
வாவென அழைத்தென் மனதாசை
மாசினை யறுத்து ஞானமு தளித்த
வாரமணி நித்த          மறவேனே

(விராலிமலை).

என்னும் திருப்புகழ் பாடித் தரிசித்து வயலூரையடைந்து,

" திகழ்பரிசெய்பதிக்கு னொனைத்
தமத்தடிமைப்படுத்த வருட்
டிருப் பழநிக்கிரி குமரப் பெருமாளே".
(வயலூர்).

என்னும் பாட்டில் பெருமான் தம்மை யாட்கொண்ட திருவருளை வியந்துபாடி சுவாமி தரிசனஞ் செய்து, மீண்டும் பழநிப்பதியை வந்தடைந்து,

" கருவிலுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
*     *     *     *     *
பழநிமலை மீதினின்ற பெருமாளே".
(திருப்பழநி).

என்னும் பிரபந்தத்தைப்பாடி சுவாமி தரிசனஞ் செய்துக் கொண்டு முன்போலவே கலிசைச்சேவகனோடு உறவு கொண்டு சிலநாட்கள் தங்கி வீரைநகரை அடைந்தனர். அவ்விடத்திலும் பழநிப்பதியில், பெருமான் எக்கோலங் கொண்டிருக்கின்றனரோ அக்கோலத்துடனே தரிசிக்க விரும்பி; தமது நண்பர் கலிசைச் சேவகனும் பெரியதொரு கோயில் கட்டுவித்து, அதில் பழநியப்பரை பிரதிஷ்டை செய்து, கும்பாபிடேகம் முதலியன நனி நடாத்தி,

" வீறு கலிசைவரு சேவகனதிதய
மேவு முதல்வ வயல்வாவி புடைமருவு
வீரை வருபழநி ஞானமலையில்வளர் பெருமாளே".

எனவும்,

" வேலைவிடு கந்த காவிரி விளங்கு
கார் கலிசைவந்த சேவகன் வணங்க
வீரை நகர் வந்து வாழ்பழநி யண்டர் பெருமாளே"

என்னும் அத்தலத்துப் பெருமான்மீது சூட்டிய பாடல் களிலெல்லாம் தமது நண்பர் கலிசைச் சேவகனுரையும் வியந்து பாடினர். பின்பு அவிநாசி, திருச்செங்கோடு, திருமுருகன்பூண்டி முதலிய மற்றைய கொங்குநாட்டு

க்ஷேத்திர மூர்த்திகளையும் பராவி, பாண்டி நாட்டிலுள்ள மதுரையை வந்தடைந்தனர். அங்கு சிலநாட்கள் தங்கித் திருப்பரங் குன்றத்தை யடைந்து,

“ உலைத்தினந் தொழுதிலனுனை தியல்பினை
* * * * *
திருப்பரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே ”

(திருப்பரங்குன்றம்).

என்னும் திருப்புகழ் பாடி சுவாமி தரிசனஞ் செய்து கொடுங்குன்றத்தை யடைந்தனர். அத்தலத்துப் பெருமானை வழிபட்டு,

“ மட்டற்ற விந்திரிய சட்டக் குரம்மை யழி
பொழு தினிலும் அருள்முக
சத்தக் கொடுங் கிரியி னிர்த்தச் சரண்களை மறவேனே ”

என்னும் திருப்புகழ் பாடி நிருத்த தரிசனஞ் செய்து இராமேசுவரத்தை யடைந்து அங்குள்ள மூர்த்திகளையும் வழிபட்டு ஈழ நாட்டுத் தலங்களாகிய திருக்கோணமலை, திருவீங்கோய்மலை, கண்டி, கதிர்காமம், யாழ்ப்பாணுயன் பட்டிணம் முதலிய க்ஷேத்திர மூர்த்திகட்கும் அவ்விடத்தினின்றே திருப்புகழ் பாடி, மலையமா நாட்டிலுள்ள திருச்செந்தூரை யடைந்து,

“ செந்திலினு மென்றன்முன் கொஞ்சி நட
னங்கொளுங் கந்த வேளே ”.

(திருச் செந்தூர்.)

எனப்பாடி நடன தரிசனஞ் செய்து, மீண்டும் சோழ நாட்டை யடைய விரும்பித் திருவானைக்காவல், திரிசிரமலை, குருகிரி முதலிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு சிதம்பரத்தை வந்தடைந்தனர். அவ்விடத்தில் சபாநாதர் நடனங்காட்டிய திருவருளை வியந்து முருகப்பெருமானையும் ஆடல் காட்டிய தரிசனஞ் செய்ய விரும்பி,

" அகுகுகு குகுவென ஆளிவாய்ப்பல
அலகைகளடைவுட னுடிமாட்டமும்
அரவனுடனெழு காளிகூட்டமு மகலாதே
அரிதுயில் சயனவி யானமூர்த்தனு
மணிதிகழ் மிகுபுலியூர் வியாக்கிரனும்
அரிதென முறை முறை ஆடல் காட்டிய பெருமாளே"
(சிதம்பரம்.)

என்கிற திருப்புகழ் பாடவே முருகப்பிரானும், வியாக்கிர பாதர், பதஞ்சலி ஆகிய இவர்களும் பிரமிக்கும்படி காளி கூட்டம், அலகைக் குழாம் முதலியவை தம்மைச்சூழ நிருத்த தரிசனங் காட்டி யருளியதைத் தரிசித்துத் திரு வேரகத்தை யடைந்து,

" தகையா தெனக்கு னடி காண வைத்த
தனி யேரகத்தில் முருகோனே"

என்று பாடி, பாத தரிசனஞ் செய்து தொண்டை நாட்டி லுள்ள திருப்போரூர், திருமயிலை, திருவாலங்காடு முதலிய க்ஷேத்திர மூர்த்திகளையும் பாடிப் பழிச்சித் திருத் தணிகையை யடைந்து,

" சினத்தவர்முடிக்கும் பகைத் தவர்குடிக்கும்
* * * * *
திருத்தணி யிருக்கும் பெருமாளே"
(திருத்தணிகை).

என்னுந் திருப்புகழ் பாடிப் பழிச்சி வள்ளிமலை, திருவிரிஞ்சை, திருவேங்கடம், சீகாளத்தி முதலிய ஸ்தலங்களையும் தரிசித்துப் பாடி அந்த சீகாளத்திப் பதியிலிருந்தே வட நாட்டுத் திருப்பதிகளிலுள்ள காசி, கேதாரம், ஸ்ரீ சைலம் முதலிய க்ஷேத்திர மூர்த்திகளையும் பாடிப் பரவி, காஞ்சி புரம் வந்தடைந்தனர். அங்குச் சிலநாட்கள் தங்கிக்குமர கோட்டத்தை யடைந்து,

" அறிவிலாப் பித்தருன்ற னடிதொழாக் கெட்ட

*  *  *  *  *

வழகு காட்டிப் புணர்ந்த குமரக் கோட்டத்தமர்ந்த பெருமானே"

(குமர கோட்டம்).

என்கிற திருப்புகழ் பாடிச் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு திருமுல்லைவாயில், திருக்கச்சூர் உத்திரமேரூர், மயிலம் முதலிய தலங்கட்கும் சென்று சுவாமி தரிசனஞ் செய்து பாடி இறுதியாகத் திருவண்ணாமலை வந்தடைந்தனர். அவ்விடத்திலிருந்து கொண்டு,

" வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டாயினு மாகக் காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்தி"

(திருமுருகாற்றுப்படை).

என்னும் நக்கீரர் நல்வாக்கின்படி எங்கெங் கெல்லாம் முருகப்பெருமான் திருக்கோயில் கொண்டிருக்கின்றனரோ அங்கெங்கெல்லாம் பாடியும், இன்னும் குமாரக் கடவுளுக்குப் பிரபல க்ஷேத்திரங்களாய் விளங்குகின்ற திருப்பரங்குன்றம், சோலைமலை, திருச்செந்தூர், சுவாமிமலை, விராலிமலை, விநாயகமலை, கண்டி, கதிர்காமம், குன்றக்குடி, மயிலம், திருப்போரூர், திருத்தணிகை, கொல்லிமலை, பொதியமலை, கழுகுமலையாதிய தலங்களிலுள்ள மூர்த்திகட்கும் அவ்வண்ணாமலைப் பதியிலிருந்தே பாடிப் பழிச்சியும் வந்தனர். ஒவ்வொரு குன்றுதோறும் குமரன் கோயில் கொண்டுள்ளான் என்று ஞானிகள் கூறும் உண்மைப்படி குமரன் கோயில் கொண்டுள்ள இவ்வோர் குன்றுக்கும் அங்கிருந்தே பாடியும் வந்தனர்.

இங்ஙனம் உலக வினை யடங்கலு மொருவித் தம்மை யாட்கொண்ட ஆண்டவனையே இடையறாது எண்ணி யெண்ணி, அவனையே மீண்டு மீண்டும் தரிசிக்க வேண்டு

மென்னும் பேராவா மீக்கொண்டவராய் அங்கேயே யிருந்தனர். அக்குறைவிலேயே அவரது நன்னெஞ்சமானது நைந்து நைந்து உருகுவதாயிற்று. அக்குறை நீங்காமை கருதியே ஓர் நாள் பல்லாயிரந் திருப்புகழ் பாக்களடங்கிய தம் புத்தகத்தைக் கையிலேந்தி திருவருணைக் கோபுரத்தின் மீதேறி நின்றார்: இறைவனை நினைந் தழுதார்: அப்புத்தகத்திலுள்ள பாக்களையும் ஒரு முறை பாராயணமாகப்பாடி முடித்தார். அப்போதும் ஆண்டவன் தரிசனம் அவருக்குக் கிடைக்கவில்லை. உடனே அயிற் குலத்துதித்த அருணைகிரிப் பெருந்தகை யண்ணல் ஆங்குநின்றபடியே திருப்புகழ் வரைந்துள்ள ஏடுகளை யெல்லாம் ஒன்றன்பின் னொன்றாக உருவிக் கீழேவிட்டு எம் அடிகளே! என்று கீழே குதித்தார். குதித்திடலுங் கருணையங் கடலாகிய குமரவேள், மனிதவுருக்கொடு வந்து, அவரைத் தாங்கி விட்டு இளம்பூரணனைத் தரிசித் துய்யப் பிராணனை விடுவதாற் பயனின்று. இன்னும் நீ தவஞ் செய்தல் வேண்டும் எனக் கூறிச் சடாக்ஷரோபதேசஞ் செய்து, உருத்திராக்ஷங் கோக்கப்பட்ட ஜெபமாலை யொன்று தந்து மறைந்தருளினார். பின்னர் இவ்வாறு வந்தருளினவன் அவனே யென்றுணர்ந்து கொண்ட அருணகிரியார் அரிய தவத்தைச் செய்து கொண்டிருக்க முருகப்பெருமானும் அங்ஙனமே கிரியா சக்தி, ஞானசக்தி யெனப்படுந் தம்முடைய தேவிமார்களிருவரோடும் மயூர வாகனத்தின்மீது தரிசனந்தந்து சோதி சடாக்கோயிலுட் புக்கு மறைந்தருளினர். பின்னர் அவின் மாமுனிவராய அடியார்க்குழாம் புடைசூழ நாதருக்குத் தரிசனங்கொடுத்து ஓங்காரத்தை யுபதேசித்து "சும்மாவிரு சொல்லற வென்றலுமே" என்றபடி மோன நிட்டையிலே அவரை யிருத்தி பரிபூரண சுவானுபூதிமானாகச் செய்தருளி மறைந்தருளினர்.

அன்று முதல் நமது சுவாமிகள் பற்றற்ற மனமும், பாந்த பக்தியும், மலர்ந்த கண்ணும், மதிமுக வெழிலும், நீறுபுனை கோலமும், நீண்கோவணமு முடையாராய்ச் சித்த கோலத்துடன் விளங்குகின்ற காலத்தில், தம்மைச் சரணடைந்த கூன், குருடு, குட்டம், பாண்டு, சோகை, சூலை முதலிய பற்பல நோய்களினால் வருந்தும் பிணியாளர்களது வியாதிகளை நீறுபூசித் திருப்புகழ் ஓதித் தீர்த்து வருதல் முதலிய பற்பல அற்புதங்களைச் செய்துகொண்டு மிகப் பிரபலமாய் விளங்கினார்.

## வில்லிபுத்தூராருடன் கல்விப்போர் செய்தமை.

வில்லிபுத்தூராழ்வார் என்பவர், பெண்ணையாறு பாயப்பெற்றத் திருக்கோவலூர், திருவெண்ணெய்நல்லூர் முதலிய சிவ விஷ்ணு ஸ்தலங்களை யுடைத்தாய நடுநாடென்னும் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூரில் செந்தண்மை பூண்ட அந்தணர் மரபிற்றோன்றியவர். வைணவ சமயத்தை மேற்கொண்டவர். சங்கநூல், தொல்காப்பிய மாதிய தொன்னூல்களையுங் கற்று இலக்கண விலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்று விளங்கியவர்.

இவர், நமது ஆசிரியர் அருணகிரிநாத சுவாமிகளின் பிரபாவங்களை பலராற் பலமுறைக் கேள்வியுற்று, அவரைச் சந்திக்க விரும்பி, திருவண்ணாமலைப் பதியை வந்தடைந்தனர். ஆங்கு, இவர் செவிக்கும் சிந்தைக்கும் வாய்க்குமினியதாய், எந்த வினைக்கு மாமருந்து போன்றுள்ளதாய், தமிழ்வீட்டு நூலெனப்படுந் தெய்வத் திருப்புகழ்ப் பாடல்களில, அந்தமிகுந்து சந்தம்பொலிந்துள்ள வகைகளைக் கேட்டுணர்ந்து ஒருவாறு வியப்படைந்தன ரேனும், இவருக்கு நமது ஆசிரியர் பாலுள்ள பொறாமை மிகுதியால் அருமறைப் பொருளாய்த் தோன்றும் அப்பாடல்களில் பிழை பல விருப்பதாகப் பலரிடத்துங் கூறி வந்த

ணர். அதனைக் கேட்டோர் அறுமுகவன் திருவருள் பெற்று விளங்கும் அருணகிரிநாத சுவாமிகள் பாடும் பாக்களிலுமா பிழை கண்டார் இவர். இது கல்விச் செருக்கினால் தருக்கிக் கூறும் பதட்டமொழி யென்றனர் சிலர். பொறாமைப் பேய்ப் பிடித்துக்கூறும் புன்மொழி யென்றனர் சிலர். இச்செய்தி அருணகிரியார்க்கும் எட்டியது. இருவரும் ஒருவரோடொருவர் சந்தித்துக் கல்விப்போர்ச்செய்தனர். வெற்றித் தோல்வி காண்ப தரிதாயிற்று. இறுதியில் ஓர் அறுதியிட்டு ஒருவர் பாடுவதற்கு மற்றொருவர் பொருள் கூறுவதென்னும் தீர்மானத்தின்படி, அருணகிரியார் கந்தரந்தாதி பாடிவர, அதற்கு வில்லிபுத்தூராரும் உடனுக்குடனே பொருள் கூறிவந்தனர். 54-ம் பாடலாகிய,

"திதத் தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத் தத்தத் தித்தத்தி தித்தித்த தேதுத்து தீதுதித்தா
திதத் தத்தத் தித்தத்தை தாதத் தேதுதை தாததது
திதத் தத்தத் தித்தித் தித்த் திதிதுதி தீதொத்ததே."

(கந்தரந்தாதி.)

என்னும் தகர விகற்ப யமகச்செய்யுளொன்றைக்கூற, அதற்கு வில்லிபுத்தூரார் பொருள் கூறாது மயங்கித் தோல்வியுதானமடைந்து, தம் முன்னர் தோற்றார் செவிகளைத் தம்வாளாற் றறுமேயரிந்து கொண்டுவந்த வாற்றானே, தம்முடைய செவிகளையு மங்ஙனமரிந்து கொள்ளலாமென்று அவ்வாளை அவரெதிரில் வைத்துக்கூற,

"காசக்குக் கம்பன் கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகி லாவனே—தேசுபெறு
மூழுக்குக் கூத்த னுவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவையெனக் கூறு."

(தனிப்பாடல்.)

என்வரும் தனிப்பாட்டின்படி அது கண்ணுற்ற நமது சுவாமிகள், இனி யொருவர் காதுகளையு மரிவதில்லை யெனும் உறுதிமொழி யெமக்குத் தந்து, நீவிர் உமது காதுகளோடு செல்லுக வென்று கருணைமொழி கூறிக் கன்னதானஞ் செய்தனர்.

பின்னர், ஆழ்வார் ஆங்குற்ற தமதிருக்கையினை அடைதலுந் திருவண்ணாமலைச் சிவாலயக் கோபுரம் தமது கண்ணிற்குப் புலப்படுவதாயிற்று. உடனே அது அவருக்குத் தெரியாதிருக்கும்படி திரையிடச் செய்தனர். அஃதுணர்ந்த அருணகிரியாரும் அக்கண்கள் மறைகவென்றலும, ஆழ்வாரும கண்களிழந்து வருந்தி மீண்டு மவரைத் தரிசித்துக் காதுகள் கொடுத்தவாறு கண்களுங் கொடுக்க வேண்டுமென்று பணிந்தனர். அருணகிரியாரும், அருணை நாதனைப புகழ்ந்து பாடும்போது கண்களும பெறுலா மென்றனர். ஆழ்வாரும் தாம் பாடிவரும பாரதத்தில்,

"ஓரேனந் தன்னைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவனந்தப்
போரேனந் தன்னைத்தேடிக் கணங்களுடனே புறப்பட்டானே"

(பாரதம்.)

என்னும் செய்யுளைப் பாடும் போது இழந்த கண்கள் இரண்டும் பெற்றனர்.

### சம்பந்தாண்டானுடன் வாதம் நிகழ்த்தியதும், கற்பக மலரின் பொருட்டுக் கிளியுருவ மடைந்ததும்.

அவ்வண்ணாமலைப் பதியின் கணவனை பொருமைப் பேய்ப்பிடித்தவனும், மந்திர மூலமாகச் சத்தியுபாசனைச் சித்தித்தவனும், வேளாண் மரபினனுமான *சம்பந்தாண்டானென்னு மொரு சமணன் முருகப் பெருமானுடைய திரு

* ஓர்கால் "மன்னென்று துவக்கி மனுக்கென்று" முடிவு பெற ஓர் வெண்பாப்பாடும்படி அயிர்குலத்துதித்த தெய்வப்புலமை இரட்டையர்களை அதட்டியவனும் இவனே.

வருட் பிரகாசம் நிரம்பி யிராநின்ற அருணகிரிநாத பெருந்தகைக்கு இன்னல் பல விளைவிக்க வெண்ணினான். உடனே அவனை அவ்வூர்க் கரசனாகிய பிரபுட தேவராயனிடஞ் சென்று யான் தேவியை நேரே யழைத்து நமக்குத் தரிசனந் தரச் செய்வலென்றும், அங்ஙனமே முருகனையு மழைக்கும்படி அருணகிரிநாதரைக் கேட்கவேண்டு மென்றுங் கூறி அரசனைத் தூண்டி நிற்பானாயினான். பின்பு, அவன் யான் தேவியை யழைக்கத் தவறுவேனேல் இந்நகருள் யான் பிரவேசியாது நீங்குவதுண்மை யென்றுங் கூறிநின்றனன். இவ்வாற்றானே அவனுடைய தீய குணங்களையும் அருணகிரிநாதரது பேராற்றலையு மறிந்தவரசன், இவனை யொழிக்குந் தருணமிதுவே யென வெண்ணினவனாய்ச் சம்பந்தன் கருத்தை அருணகிரியார்க் கறிவித்து, ஒரு பெருஞ்சபையுங் கூட்டுவித்தான். ஆங்குச் சம்பந்தாண்டானும் தன்னுரைப்படியே தேவியை மந்திரமூலமாக வுபாசித்தான். உடனே தேவி தனக்குத் தரிசனந் தந்தும், அரசனுக்குத் தரிசனங் கொடாமையின் தோல்வியுற்றான்.

குமாரக்கடவுள் திருவருள்பெற்ற அருணகிரிநாதரும், விதிப்படி கிரியைக ளெல்லா மியற்றிக் குமரனை வழிபாடு செய்ய, அவனும் உடனே தரிசனந் தந்தானில்லை. சம்பந்தாண்டானும், அருணகிரிநாதர் வெற்றி பெறுவண்ணம் செய்வதற்கு விடுவலையை வேண்டியிரக்க, பக்திவலையிற் படுபவளாகிய பவானி, அவனது வேண்டுகோட் கிணங்கிக் குன்றமெறிந்த குமரனை வலியத் தன் மடியின்மிசை யிருத்திச் செல்லாதிருக்குமாறு தடை செய்துள்ள சூழ்ச்சியை அருணகிரியாருமறிந்து, முருகன் மனமுவக்குமாறு,

"குறவர் மகள் புணர் புயகிரி சமுகமும்
அறுமுகமும் வெகு நயனமும் ரவியுமிழ்
கொடியு மகிலமும் வெளிபட யிருதிசை யிருபாலும்

படியு நெடியன எழுபுண ரியுமுது
திகிரி திகிரியும் வருக்சன வெருக்கு
பஞ்சரி வருமொரு மரகத துரகத    மிசையேறிப்
பறைபடு அடியவ ருடனிமை யவர் கண
மிருபுடையுமிரு தமிழொடு மறையொடு
பரவ வருமதி லருணையி லொருவிசை    வரவேணும்".

எனவும்,

"அதல சேட னாராட அகில மேரு மீதாட
மயிலு மாடி நீயாடி    வரவேணும்."

என்னும் திருப்புகழ்களைப்பாடி, மயிலினையும் வேண்டி மயில் விருத்தம் பாடினர். அன்பன் உளச்சருத் துணர்ந்த மயிலும் அம்பிகை முன்னர் நீலகண்டமும் சர்ப்பாபரணமும் காட்டி நடனம் புரிந்தது. தேவியும் பேரானந்த முற்றனள். அதையறிந்த குமரனும் தாய்மடியி னீங்கி மயிலின் மீதேறிய வக்கணமே தூணிடைத் தோன்றினான். (இப்பெருமானை கம்பத்திளையனார் எனப்படுவர்). அருணகிரிநாதரும் மனமாரக்கண்டு மகிழ்ச்சி மீக்கூர்ந்து, அரசனையும் தரிசிக்கச் செய்தனர். அரசனும் தரிசித்த அன்பின் பெருக்கால் ஆனந்த பரவசமடைந்தான். தோல்வித் தானமடைந்த சம்பந்தாண்டானும் நகரைவிட்டு நீங்கினனென்றாலும் மழைவிட்டும் தூவானம் விடவில்லையென்பது போலப் பொறாமைப் பேய்ப்பிடித்துந்தும் சம்பந்தாண்டானும், மீண்டும் அண்ணாமலைப்பதியை வந்தடைந்து, அரசனை யடுத்து அவனுடன் கூட்டு கொண்டு ஓர் உபாயஞ் செய்து அருணகிரிநாதரைச் சம்பகமலர்க் கொணருமபடி ஏவ அரசனைத் தூண்டினான். அவ்வரசனும் அங்ஙனமே அருணகிரியாரையும் மலர் கொணரச் செய்தனன். அருணகிரிநாதரும் மலர் கொணர்வதாக உடன்பட்டு, இம்மண்ணுலகி னின்றும் விண்ணுலகத்திற்கு இம்மானிட வுடலோடு செல்லக்கூடா தென்பதை

முன்னிட்டுத் தாமே யொரு கிளியுருவத்தைத் தாங்கி, விசும்பிற்றாவிப் பறந்து அவ்வுலகை யடைந்து, ஒரு கல்லையிற் சில கற்பக மலர்களையிட்டு வாயாற் கவ்விக்கொணர்ந்து, மலர் மணம் நகர் முழுதுங்கமழ அரசனுக் கறிவித்து, அச்சுக வடிவத்தை மாற்றித் தமது பழயவடிவத்தைக் காட்டி நின்றார். இச்செய்கை இவருக்கு ஒரு விளையாட்டாக விருந்தது.

## சிதாகாசப் பெருவெளியில் மறைந்தருளல்.

சொற்சுவை, பொருட்சுவை யாப்புச்சுவை, அணிச்சுவைகளோடு சந்தம் பலசெறிந்து விளங்கி அருமறையின் சிரப்பொருளாய்த் தோன்றுவதும்,

"எம்மருணகிரி நாதரோது பதினாறாயிரந் திருப்புக ழமுதமே".
(திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்)

எனவும்,

"அருணகிரிநாத னறைந்த பதினாறா
யிர கவிதை யென்றுலகில் யாரு—முறை புகலுந்
தெய்வத் திருப்புகழ்"
(திருத்தணிகையுலா).

எனவும்,

"செவ் வேடனைக் கருணகிரி நாதர் நன்னயந்
தேர்ந்து மகிழ் கூர்ந்து நுவலும்
பத்துடனா றாயிரந் திருப்புக ழமுது"
(திருத்தணிகை சந்நிதிமுறை).

எனவும் போற்றப்படுவதுமாகிய * பதினாறாயிரந் திருப்புகழும், வில்லிபுத்தூரார் பொருளறியாது மயங்கித் தோல்

* அவை யொரு புத்தகமா யில்லாத காரணம்:—முன்மொழிந்தபடி நாதனார் அருணைக் கோபுரத்தி னின்றவாறே அப்புத்தகவேடுகளை பூமியிற் சிதறி வீழுமாறு உருவி விட்டன ரென்பதை வலியுறுத்துவதாம். அவைகள் பல்லோர் வயப்பட்டுப் பல புலவாய்ப் புல்லிடம் போயின வெண்க,

வித்தான மடையச் செய்த தசாவிகற்ப யமகச்செய்யு ளொன்றை தன்னகத்தே கொண்டுள்ள கந்தரந்தாதியும், திருச்செந்தூர், திருச்செங்கோடு, பழநி, திருத்தணிகை முதலிய தலங்களில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமா னைச் சிறப்பித்துக்கூறிய கந்தரலங்காரமும், சீர்பாத வகுப்பு, கடைக் கணியல் வகுப்பு, வேல்வகுப்பு, மயில்வகுப்பு, சேவகன் வகுப்பு, மயில் விருத்தம், வேல் விருத்தம் முதலிய பிரபந்தங்களும் ஆண்டவனருளால் அருளிச்செய்த நமதாசிரியர் அருணகிரிநாத முனீந்திரர் இறுதியாகத் தமது பிரமானுபவத்தைக் குமார பிரானின் நாற்பத்து முக்கோணச் சக்கரத்து ளடைக்கப் படுவான்,

"ஆடும்பரி வேலணி சேவ லெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே"

என்று தொடங்கி,

"தூசா மணியுந் துகிலும் புனைவா
ணேசா முருகா நினதன் பருளா
லாசா நிகளந் துகளா யினபின்
பேசா வனுபூதி பிறந்ததுவே"

என்று முடிந்த நாற்பத்து மூன்று பாக்களாய கந்தரனு பூதியில் நன்கு பிரகாசப் படுத்தியருளி அதனிறுதிமொழி களின்படி மோன நிட்டையில் சின்னாளிருந்த பின்னர், உத்தராயணத்து ஆனும் பௌர்ணமியாகிய சுபதினத்தில் சிதாகாசப் பெருவெளியில மறைந்தருளினர். சுபம்.

"கந்தரனுபூதி பெற்று கந்தரனுபூதி சொன்ன
எந்தை யருணகிரி யிருக்கு நாளெந் நாளோ".

சரித்திர சங்கிரக முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் சரிதத்திய

# கவனக்குறிப் பட்டவணை.

**காலவரை.**

ஓட்டுடன் பற்றின்றி யுலகைத்துறந்த செல்வராகிய பட்டினத்தடிகள்,

"வித்தகப்பாடன் முத்திறத்தடியருந்
திருந்தியவன்பிற் பெருந்துறைப்பிள்ளையு
மத்தகுசெல்வத் தவமதித்தருளிய
சித்தமார் சிவவாக்கிய தேவரும்

* * * * *

விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரியவன்பின் வரகுண தேவரும்"

(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.)

என, ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்த மாணிக்கவாசக சுவாமிகளையும், சிவவாக்கிய தேவரையும், வரகுண பாண்டியனையும் வியந்து பாடுகின்றமையின், இவர் அவர்களுக்குப் பிற்பட்டவரெனவும், இவருடைய பாடல்கள் பதினொன்றாந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளமையின், அத்திருமுறை வகுத்தருளிய நம்பியாண்டார் நம்பிக்கு முற்பட்டவரெனவுந் தோன்றுகின்றது. நம்பியாண்டார் நம்பி, கி. பி. 985-ம் ஆண்டு தொடங்கி கி. பி. 1013-ம் ஆண்டு

வரை அரசுபுரிந்த அபயகுல சேகரனென்னும் இராஜ ராஜசோழன் வேண்டுகோளின்படி சைவத்திருமுறை வகுத்தனர். இவ்வரசன் மகனாகிய இராஜேந்திரசோழன் காலத்திலும், நம்பியாண்டார் நம்பி இருந்தவராகத் தெரியவருதலினால் அவர்காலம் பதினொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியெனப் பெறப்படுகின்றது. ஆகவே, பட்டினத்தார் காலம் பத்தாம் நூற்றாண்டாக இருக்கவேண்டும்.

குமரன் கழலிணையே சரணென வுருகித் திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாத சுவாமிகள்,

"உதயதாம மார்பான ப்ரபுடதேவ மாராஜ
னுளமு மாட வாழ் தேவர் பெருமாளே".

எனக் குறிப்பாகப் பாடுகின்றமையின் இவர் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி (கி. பி. 1477) யிலிருந்த பிரபுட தேவராயனென்னும் விஜயநகரத்தரசன் காலத்தவரென்பது ஏற்புடைத்தாம். வில்லிபுத்தூராரும் இக்காலத்தவரென்று கூறுவர். ஆகவே, அருணகிரியார் காலம் இற்றைக்குச் சுமார் 440-வருடங்களுக்கு முன்பெனத் தீர்மானிக்கலாம்.

இனி, அருணகிரிநாதர், இல்லறத்தை யிகழ்ந்து துறவுபூண்டு சைவமார்க்கத்தில் நின்று சிவானுபூதிபெற்று விளங்கிய பட்டினத்தடிகட்குப் புத்திரராவர் என்பது சில குறுகிய நோக்கமுடையார் கொள்கை. இதற்காதாரமாக கன்ன பரம்பரையான கதையொன்று வழங்கி வருகின்றது. நமது அடிகள் திருவண்ணாமலையிலிருந்த காலத்திலோர் நாள், தம்முன்னெதிர்ப்பட்ட ஒரு தாசிப்பெண்ணைக்கண்டு, அதிக விரகமுற்று அவளுக்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்தனரெனவும், அதற்கவள் உடன்படாது

மறுத்துச் சென்றனளெனவும், உடனே வீரியம் வெளிப்படவே ஒருவாறு மனந்தேறி யிருந்தனளாம். வீடுநோக்கிச் சென்ற தாசிப்பெண் இச்செய்தியைத் தன் தாயினிடம் சொல்லலும், இதையறிந்த தாய்க்கிழவி, ஐயோ! கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போயிற்றே யெனப் பெரிதும் வருந்தி, நமது அடிகளின் பெருமையைத் தன் மகளுக்குப் போதிக்க, அப்பெண் மீண்டும் பட்டினத்தடிகள் பாற்சென்று அவளது உட்கருத்தை தெரிவித்தனளாம். சிவசிந்தனையின் பாற்பட்டு உலக வின்பத்தை வெறுத்து பரநிலையையறியும் நோககத்தாயிருந்த அடிகள் அவளது இச்சையை மறுத்து அவளை நோக்கி,

" தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு—நாடிநீ
யென்னை நினைத்தா லிப்பிறவியைப் பெறு
மன்னை நினைத்தா லதை ".

என்னும் பாட்டைப்பாடி மறுத்தனரெனவும், அதற்கம்மாது மனங்கலங்கி வருந்த, அடிகள் பரிவுற்றுத் தமது வீரியமிருக்குமிடத்தைக் குறிப்பால் அவளுக்குத் தெரிவித்தனரெனவும், அவள் அதையுண்டு கருப்பமெய்தி அருணகிரியாரைப் பெற்றனளெனவும், மற்றும் பலவாக முன்னர் அருணகிரியாரிடத்துப் பொறாமைகொண்ட சமயந்தாண்டான் வழிவந்த சில அற்பர்கள் தங்களது கூர்த்த புத்தியால் சூதநாககயிறு கட்டிவிட்டனர். அதனையே ஆராய்ச்சிச் சிறிது மில்லாப் பண்டிதன் முதல் பாமரனீறாக வழங்கலானார்கள். நன்று! நன்று! இப்பொய்க்கூற்றையே மெய்யெனக் கொள்ளின், பத்தாம் நூற்றாண்டிலிருந்த பட்டினத்தடிகளது வீரியத்தையுண்ட அந்த தாசிப்பெண், சற்றேறக்குறைய 500 வருடங்கள் சூலாயிருந்து பதினைந்தாம் நூற்றாண்டில் கருப்பவாதனையுற்று, அருண

கிரியாரை என்றனளென் றேற்படுகின்றது. இது மானிட வியற்கைதானே! அறிஞர் யாவரும் ஒப்ப முடிந்த விடயமாமோ! சூத்திரக்கயிறு கட்டிய அற்பர்களது அறிவுதான் இருந்தவாறென்னே! ஐயகோ! இவர்களை உண்மையில் பரம்பரைச் சைவர்களல்லரென்றும், ஆராய்ச்சிச் சிறிதுமில்லாவற்பர்களென்றும், சைவசமய போலிகளென்றுங் கூறலாம். இது,

“சொன்னதைச் சொல்லுமிளங்கிளியே யென்பார் தண்டலையார் தொண்டர்களை, இன்னதற்கு இன்னதென்று பகுத்தறிவொன் றில்லாத வீணரெல்லாம், தன்மெருத்துக் கண்டவுடன் காணுமன் முறைபேசிச் சாடைபேசி, முன்னுக் கொன்றாயிருந்து பின்னுக் கொன்றாய் நடந்து மொழிவாரே”. (தண்டலையார் சதகம்.)

என்னும் படிக்காசுத்தம்பிரான் பாட்டினை யொக்கும். இவர்கள் நமதாசிரியரை நிந்தித்துக்கூறிய பாவத்திற்காக எரிநரகடைவார்கள் என்பது நிச்சயம்.

## மரபு விளக்கம்.

குகப்பிரானைப் பாக்களால் துதித்துள்ள குரவடியார் களெல்லாம் வெருவாய்த் தமது பாடல்களில் தத்தம் குலப்பெயர் பொருள் படுமாறு ஆண்டவனைக் குறிஞ்சிக் கிழவனென்றும், செட்டிக்குமரனென்றும், மருதத்தலைவனென்றும், சௌரியைந்தனென்றும், கம்பாபுத்திரனென்றும் இன்னும் பலவாறாகச் சித்தரித்துக் கூறுவதியல்பு. அவ்வாறே நமதாசிரியர் அருணகிரிநாத சுவாமிகளும்,

“கருமான் மருகனைச் செம்மான் மகளைக்களவு கொண்டு
வருமா குலவனைச் சேவற் * கைக்கோளனை வானமுய்யப்
பொருமா வினைச் செற்றபோர் வேலனைக் கன்னிப்பூகமுடன்
தருமா மருவு செங்கோடனை வாழ்த்துகை சாலநன்றே”.

(கந்தரலங்காரம்.)

---

* திருவிளையாடற் புராணவாசிரியரான பரஞ்சோதி முனிவரும், ஷெ புராணம், மூர்த்திவிசேடம் 13-வது செய்யுளில், “சிவ

எனவரும் தமது செய்யுளில் நமதாண்டவனைத் தம் குலப் பெயர் பொருள் படுமாறு "கைக்கோளன்" என்று சுட்டிக் கூறுகின்றார். சேவற் கைக்கோளன் என்பதற்கு சேவலைக் கையிற் கொண்டுள்ளவனென்று பொருள் கூறினுங்கூட சாதியபிமானமும், சமயாபிமானமும் பற்றற்ற சன்னியாசிகட்கும் விடாவென்பதற்கொப்ப, தம்முடைய மரபையும் சொல்லாமற் சுட்டிக் கூறுகின்றாரென்றேற்புடைத்தாம். ஆகவே, இப்பெரியார் கைக்கோளர் (செங்குந்தர்) மரபைச் சார்ந்தவரென்றேற்படுகின்றது. அவ்வாறு இம்மரபைச்சார்ந்தவரல்லராயின் சேவற் கைக்கோளனென்று கூறாது சேவற் கையோனென்றும், சேவற் கைக்கொண்டோனென்றும் வறிதே கூறியிருத்தல் வேண்டும். இஃதன்றி, அந்தத் திருவண்ணாமலைப் பதியிலே, நமதாசிரியர் காலத்திருந்த பலவகுப்பனருள்,

"முந்தை தோன்றினன் முருக வென்முசு
குந்தனுக் கொன்பான் குமரரைத் தர
வந்தவீர ரிவ்வகிலம் யென்றிசைத்
தந்தகுத் தரிதகு செங்குந்தமே". (ஈட்டி யெழுபது.)

எனவரும் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் கட்டுரையின்படி உபசுப்பிரமணியர்களாகிய நவவீரர்களின் சந்ததியாரெனப்படுகிற செங்குந்தர்களே,

---

பரஞ்சுடரைக் கண்டோர்" என்றுங், இந்திரன் பழிதீர்த்த படலம் 83-வது செய்யுளில், "பரஞ்சுடரை யருச்சிப்பானுயினனே" என்றும், 87-வது செய்யுளில், "பரஞ்சுடரே போற்றி" என்றும், 95-வது செய்யுளில், "பரஞ்சுடர் விடைகொடுத்தான்" என்றும், திருமணப்படலம் 44-வது செய்யுளில், "பரஞ்சோதி மற்றது கூறும்" என்றும், 147-வது செய்யுளில், "சிவ பரஞ்சோதி பாதம்" என்றும் கூறியுள்ளது பெரிதும் குறிப்பிடத்தக்கது. பரஞ்சுடர் பரஞ்சோதி என்னும் பதங்கள் பரமன் பெயரைக் குறித்ததாயினும் ஆசிரியன் பெயரும் அமைந்துள்ளமையைக் கவனிக்க.

"நட்டார் சிரவோர் மறையோர்க்கு நாட்டேந்தமிழ் நன்னுவலர்க்கு, நம்பிமிகு நீர்தம்பமென நாடியடைந்தோர் தங்களுக்கும்.—பட்டார் கொடி சேரிடையார்க்கும் பான்மையுடைய தவத்தோர்க்கும்,— பசித்தோர் தமக்கும் பாரலகிற் பலருமதிக்கப் பான்மையுட,— னிட்டார் பெரியோரெனக் கேட்டிங்கிரவும் பகலுமருள்புரிய, மீகை யுடைய பெரியோர்களேமக்களபம் பரிமளிக்கு,—மட்டார் கடப் பப் புயவீரவாகுத் தலைவர் வருகவே, வளஞ்சேரருணபுரியில் வந் தோர் வருக வருக வருகவே". (செங்குந்தர் பிள்ளைத்தமிழ்.)

எனவரும் செய்யுளின்படி, செல்வம், கல்வி, ஒழுக்கம், ஆசாரம், தானம், தவம் முதலியவைகளிற் சிறந்து விளங்கி யிருந்தனரென்று நாவினுன் மழுவெடுத்த ஞானப்பிர காச சுவாமிகள் கவிலும் நல்வாக்கும் நன்கு குறிப்பிடத் தக்கது. இங்ஙனம் மேம்பட்ட இவர்கள் சுமார் 200 - வருடங்களுக்கு முன்னரிப்பதியிலிருந்த கன்னட மூர்த்தி யாகிய குகை நமச்சிவாயர் காலத்திருந்து க்ஷீணதசை யடைய நேர்ந்ததென்றும் இக்காலத்து வழங்கும் கன்ன பரம்பரையானே விளங்குகின்றது. இக்காரணத்தானும் இப்பெரியாரை இக்குலத்தவரென்றே நிச்சயமாய்க் கூற லாம்.

## தடுத்தாட்கொண்ட விஷயக்குறிப்பு.

சில அன்பர்கள், நமதாசிரியர் இளமைப்பருவந் தொ டங்கியே சிற்றின்ப விழைச்சு மிக்காராயிருந்தன ரென வும், அவ்வினைப் பயனுகவே குட்ட நோயாற் பிடிக்கப் பட்டு மெத்த வருந்தினரெனவும், அதனைச் சகியாராய் மனவருத்தம் மிகக்கொண்டு முருகவேளைச் சரணடைந் துத் திருப்புகழ்பாட அனுக்கிரகம் பெற்றன ரெனவும், அவரது அனுபவத்திற் கண்டதையே பெரும்பாலும் திருப் புகழில்பாடி அமைத்தன ரெனவும், குமரன் திருவடிகளுக்

குத் திருப்புகழ்ப் பாமாலை சூட்டிய பிறகே நோய்தீர்ந்தனரெனவும் பாடங்கற்பித்துக் கூறுவர். இக்கூற்றுக்கள் அவரது அருட்டகைமைக்கும் ஆற்றலுக்கும் பெரிதும் முரண்படுவனவாகவுள. இது அறிஞர்யாரும் ஒப்பமுடிந்த விடயமன்று. என்னை !

“வாதுப் பாவே வண்ணப்பாவே
வண்ண மொன்றுக்குப் பாதநான்கே
பாதமிரண்டு கலையெனப் படுமே
கலையொரு மூன்று சீரெனத்தகுமே
சீரோ துள்ளலெனச் செப்பப்படுமே
முதற்கலையிடுவது தெய்வச் செயலே
இரண்டிற் கிடுவது இலைகொடைவிருது
மூன்றிற் கிடுவது புகழும் வீரமு
நான்கினுயக குட்டின் வளத்தோ
ரேரும் பேரு முவப்பக் கூறன்
மற்றைப்பாதி நற்றுயிராங்க
லாதிபாவகப் பொருளமைந்த இளவியிற்
கூறலென்ப குறிப்புணர்ந்தோரே”.

என்னும் சூத்திரத்திற் கூறியுள்ள வருணனைகளோடு பாடுவது வண்ண மாகலின் பேரின்பத்தை அவாவிய அவ்வாசிரியர் பிற்பாதியிற் கூறவேண்டிய பொருளை முற்பாதியில் வைத்து அதனையிகழ்ந்தும், முற்பாதியில் கூறவேண்டிய பொருளை பிற்பாதியில்வைத்து அதனைப் புகழ்ந்தும் பாடுவாராயினர் என்பது பெறப்படுகின்றது. ஆகவே, திருப்புகழ் முறையுள் வரும் இத்திறப் பாடல்களெல்லாம் சிற்றின்பத்தின் பொருள் கூறாது பேரின்பத்தின் முடிவு கூறுவனவே.

## கிளியுருவம்பெற்ற விஷயக்குறிப்பு.

முன்னர் சரித்திரத்திற்கூறிய செய்திக்கு மாறாக, அருணகிரியார் தம்முடலைக் கோபுரத்தின்மீது விடுத்துக்

கிளியுடலுட்புகுந்து சென்றாரென்பதும், அவ்விருத்த வுடல் சம்பந்தாண்டாருடைய தூண்டுதலான் எரிக்கப் பட்டதென்பதும், சுவாமிகளுடைய அருட்டகைமைக்கும் ஆற்றலுக்கும் முரண்படக்கூடுவனவே. இச்செய்தி சுத்த அசம்பாவிதமாம். ஆசிரியர் அருணகிரிநாதர் குகப் பிரமத்தினருளாற் சருவஞ்ஞத்துவம், சுவப்பிரகாசத்துவம் முதலிய கலியாண குணங்களை யடைந்த பெருந்தகையின ரென்னு முண்மையாலும், இழிதகையுடைய வாயு கும்பயோகத்தைக் கண்டித் தொதுக்கிய அவர் அந்த யோகத் தாற் செய்யவல்ல பரகாயப் பிரவேசஞ் செய்யத்துணியா ரென்னு நிச்சயத்தாலும் ஸ்ரீமத். ஸ்காந்த மகாபுராண மெனும் முதல்வன் புராணத்து சம்பவ காண்டத்து 41-ம் அத்தியாயத்தில்,

"உலகில் எம்மைச் சரணமடைந்தோர்க்கு அச்சம்யாது? இச்சகத்தே எம்மடியார்க்குப் பகைஞர்யாவர்? பிணியுமுண்டோ? மனிதப்பதடியாயுள்ள ஒருவன் அறிவீனத்தால் எம்மடியாரைப் பகைப்பானாயின், அவன் எம்மையே பகைத்தவனாவன்: எமக்கபராதஞ் செய்தானது செய்கையை யாம் மன்னிப்போம்: அந்தத் துராத்மாவின் செய்கையை யொருபோதும் மன்னியோம்: இந்திரனாலாதரிக்கப்படினும் அவனைக் கண்டனஞ் செய்துவிடுவோம்".

எனவரும் கட்டுரைகள் கந்தபிரானுடைய திருவாக்காயிருத்தலின் அப்பிரான் தம் மெய்யடியவரதுடம்பிற்குப் பகைஞனழிவுபுரியப் பார்த்திராரென்பதனாலும் முரண் படுவனவாகவுள வென்னும் இம்முடிபு பெரிதுங் கொளக் கிடக்கின்றது.

கவனக்குறிப் பட்டவணை

முற்றிற்று.

# மேற்கோட் செய்யுட்டொகை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | சோணசைலமாலை | 3 |
| 2. | கந்தபுராண சங்கிரகம் | 5 |
| 3. | திருக்குறள் | 6,7 |
| 4. | பட்டினத்தார் பாடல் | 7,26 |
| 5. | திருவிரிஞ்சை முருகன்பிள்ளைத்தமிழ் | 7,8,22 |
| 6. | கந்தரனுபூதி | 7,23 |
| 7. | கந்தரலங்காரம் | 8,27 |
| 8. | திருமுருகாற்றுப்படை | 15 |
| 9. | கந்தரந்தாதி | 18 |
| 10. | தனிப்பாடல் | 18 |
| 11. | பாரதம் | 19 |
| 12. | திருத்தணிகையுலா | 22 |
| 13. | திருத்தணிகை சந்நிதிமுறை | 22 |
| 14. | தாயுமானவர் பாடல் | 23 |
| 15. | திருவிடைமருதூர் மும்மணிக்கோவை | 24 |
| 16. | தண்டலையார் சதகம் | 27 |
| 17. | ஈட்டியெழுபது | 28 |
| 18. | செங்குந்தர் பிள்ளைத்தமிழ் | 28,29 |
| 19. | வண்ணப்பாட்டியல் | 30 |